## TV VIEWERS, ERODE DISTRICT

இவர்களுக்கு சகோதரர் தங்கராஜ் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள்

இந்நேயர்கள் ஒவ்வொரு வாரமும் தவறாது நமது நிகழ்ச்சியைப் பார்த்து வருகிறார்கள்



தேவனுடைய ராஜியத்தில் புதிதாய் பிறந்தவர்கள்

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Apr. 2015

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter on Saturday 5.30P.M &Tamilan TV on Monday 6.00 A.M & Saturday 6.15 P.M

**To**

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | ஏப்ரல் 2015 | கனி 5




**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ்
அவர்களின் வேதபாடம்,
சகோ.ராஜாமணி
அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 176

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை மே மாத இதழில்.

1. பிலேமோன் அப்போஸ்தலனாகிய பவுலின் உடன்வேலையாளா?
2. ஒரு இராத்திரியில் கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளத்தில் எத்தனைபேரைச் சங்கரித்தான்?
3. நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி எதைப் பற்றிக்கொள்ளக்கடவோம்?
4. தாவீது எந்நிலையில் இருந்தபோது தன் குமாரனாகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினான்?
5. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, எதினால் நீதிமானாக்கப்பட்டான்?
6. தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு துரோகம் துரோகம் என்று கூவினவள் யார்?
7. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவர் யார்?
8. எஸ்றா பாபிலோனிலிருந்து எந்த மாதம் எந்த தேதியில் புறப்பட்டு எந்த மாதம் எந்ததேதியில் எருசலேம் சென்றடைந்தான்?
9. உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
10. அர்தசஷ்டா ராஜாவுக்கு முன்பாக துக்கமுகமாயிருந்த வேதபாரகன் யார்?

## பெத்தேல் Bethel

- பழைய ஏற்பாட்டில் இது வழிபாட்டிற்கான பிரசித்தி பெற்ற ஒரு இடமாகும்.
- முதல் முதல் ஆபிரகாம் இங்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். ஆதி.12:8
- யாக்கோபு பிரயாணத்தில் லூஸ் என்னும் பேர்கொண்ட ஊருக்கு பெத்தேல் என்று பெயரிட்டான் - ஆதி.28:19
- யாக்கோபு பெத்தேலிலே ஒரு பலிபீடத்தை உண்டாக்கக் கட்டளை பெற்றான் - ஆதி.35:1
- இது கானான் தேசத்தில் இருந்தது - ஆதி.35:6
- பெத்தேல் பென்யமீன் புத்திரருக்கு கிடைத்த சுதந்தரம் - ஆதி.18:22,28
- எலிசா எலியாவை பின்தொடர்ந்து பெத்தேல் மட்டும் போனான் - 2இரா.2:2



சிறுவர் பகுதி

# மாயமற்ற விசுவாசம்

## Unfeigned Faith

*வேதபகுதி: 2 தீமோத்தேயு1:1-5*



பிரியமான தம்பி, தங்கைக்கு, பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

நாங்கள் இரவும் பகலும் இடைவிடாமல் எங்கள் ஜெபங்களில் நினைத்து ஜெபிக்கிறோம். உங்களில் இருக்கிற விசுவாசம் மாய மற்றதாயிருக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். விளையும் பயிரை முளையிலே அறியலாம் என்ற முதுமொழிக்கு இணங்க சிறு பிள்ளைகளாகிய உங்களை உலகம் தன் கண்களால் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகின்றது. ஆகையால் பவுல் தீமோத்தேயுவுக்கு கொடுத்த ஆலோசனையையே உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். “உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன்” என்று வாலிப சகோதரனாகிய தீமோத்தேயுக்கு எழுதுகிறார். அது அவருக்குத் தானே நமக்கெதற்கு என்கிறீர்களா? அப்படியல்ல, நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாம் அப்படிப்பட்ட விசுவாசத்தை உடையவராக இருந்ததால் விசுவாசத்தின் தகப்பன் என்றழைக்கப்பட்டார். தீமோத்தேயுவின் பாட்டியும், தாயும் மாயமற்ற விசுவாசத்திலே வளர்ந்தவர்கள் அந்தப்படியே நீங்களும் வளரவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். உயர்குல திராட்சை செடியை நாட்டினால் உயர்குல திராட்சை பழங்களை பறிக்கலாம். அந்தப்படியே நம் முன்னோர்களின் மாயமற்ற விசுவாசத்தை உடையவர்களாயிருந்தால் அவர்களைப்போல ஆசீர்வதிக்கப்படுவோம்.

ஆபிரகாம் காணாததை நம்பினார். அதைப்போல நீங்களும் இதுவரை பெறாத ஆசீர்வாதங்களைப் பெறுவோம் என்ற நம்பிக்கையோடிருக்க வேண்டும். தேர்வில் பாஸ் பண்ணுவேன் என்ற நம்பிக்கையோடு தேர்வு ஆயத்தமாகுங்கள். வெற்றி நிச்சயம். ஆபிரகாம் பிறனுடைய சரட்டைக்கூட இச்சிக்க வில்லை. அப்படியே நீங்களும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சித்து எடுத்துக் கொள்ளாதிருங்கள். மாயமற்ற விசுவாசமுள்ள முற்பிதாக்களைப்போல வாழ்ந்து மாறாத வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை தேவனிடத்தில் பெறுங்கள்.

*மனப்பாட வசனம்:*

**“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” எபிரெயர்11:1**



திவேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 15 ஏப்ரல்-2015 கனி - 5

ஆசிரியருரை

# மன்னிப்பு

## Forgiveness



மன்னிப்பு என்பது ஒரு மகத்தான செய்தியாகும். மன்னிப்பைப் பற்றி பேசிவிடலாம் ஆனால் மன்னிப்பது என்பது இருதயப்பூர்வமாக வரவேண்டிய ஒன்று. நாம் பிறரை மன்னிக்கும்போது நாம் மன்னிப்பைப் பெறுவோம். நம்முடைய ஆண்டவர் இது குறித்துப்போதிக்கும்போது; "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" என்கிறார் (மாற்.11:25). முதலாவது நம்முடைய ஜெபம் அதாவது வேண்டுதல் கேட்கப்படவேண்டுமானால் நாம் பிறரை மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். பிறரை மன்னிக்காமல் இருந்துகொண்டு நாம் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது அவர் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுப்பது எப்படி? மேற்கண்ட வசனத்தின்படி நாம் பார்க்கும்போது முதலாவது, நாம் மற்றவர்கள் செய்யும் தவறை மன்னித்து விட்டு பின்பு தேவனிடத்தில் வேண்டிக்கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களை மன்னிக்காமல் இருந்துகொண்டு தேவனிடம் செல்வது ஏற்கப்படாது.

இருவர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்திற்குச் சென்றார்கள்; "ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று; தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்18:10-14). மற்றவர்களை குறைசொல்லி தேவனை நோக்கி ஜெபித்த பரிசேயனுடைய ஜெபத்தைக் கர்த்தர் நிராகரித்தார். தன்னை முழுவதுமாக தாழ்த்தி தான் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொண்டு ஜெபித்த

ஆயக்காரனுடைய ஜெபத்தை கர்த்தர் அங்கிகரித்தார். ஆம், அன்பானவர்களே, நம்மை தேவனுடைய சமுகத்தில் தாழ்த்தும்போது கர்த்தரால் உயர்த்தப்படுவோம். பிறரை குறை சொல்லாமல் நாம் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொண்டு கர்த்தருடைய சமுகத்தில் முறையிடுவோம்.

அதைபோல மற்றொரு உவமையில் ஆண்டவர் குறிப்பிடும்போது; "ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக; எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான் அதற்கு அவர் சரியாய் நிதானித்தாய் என்றார்" (லூக்.7:41-43). சீமோன் சரியாய் நிதானித்து கர்த்தர் கேட்ட கேள்விக்கு பதில் அளித்தான். ஆனால் அவனோ ஆண்டவர் இயேசுவுக்கு கால்களை கழுவ தண்ணீர் கொடுக்கவில்லை, அவரை முத்தஞ்செய்யவில்லை. இயேசு சீமோன் வீட்டில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரை கண்டு தன் பாவங்களை கண்ணீரால் நனைக்க வந்த பாவியாகிய ஸ்திரீயோ, அவர் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்து, கண்ணீரினால் ஆண்டவருடைய கால்களை நனைத்து, தன் கூந்தலினால் அவைகளை துடைத்தாள். மேலும் ஆண்டவருடைய பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். அவளுடைய அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். நாம் எந்த அளவு தேவனிடத்தில் அன்புகூருகிறோமோ அந்த அளவு அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். அதுபோல நாமும் பிறரை மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

அதைப்போல மற்றொரு உவமையில்; "பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும்; அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த உழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும் எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய் அவன் பட்டகடனை கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம்



நமது தேசியக்கொடி

## பொது அறிவுக் களஞ்சியம்



### தேசியக்கொடி

(National Flag)

இந்தியாவின் தேசியக்கொடி மூவர்ணக்கொடி. இதில் மேலே காவி நிறமும், நடுவில் வெள்ளை நிறமும், கீழே பச்சை நிறமும் உள்ளன. வெள்ளை நிறத்தின் நடுவில் நீல நிறத்தில் தர்மச்சக்கரம் உள்ளது. இது 24 கோடுகளைக் கொண்டது. இக்கொடி 1947-ம் ஆண்டு ஜுலை மாதம் 22-ந்தேதி அங்கிகரிக்கப்பட்டு அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ந்தேதி நள்ளிரவில் இந்திய மகளிர் சார்பில் நாட்டிற்கு வழங்கப்பட்டது.

தெரிந்து கொள்வோம்



## யானை

- K.R.K.Ravi Asir
Associate Editor

- ஒரு நாளைக்கு 30 மைல்கள் வரை யானையை நடத்திச் செல்ல முடியும்
- யானை தினமும் இரண்டு முறை குளிப்பதையே விரும்பும்
- மனிதனைப் போன்றே யானை குறட்டை விட்டுத் தூங்கும்
- பாகனுடன் நட்பாகப் பழக ஒரு யானைக்கு குறைந்தது ஒரு வருடம் பிடிக்கும்
- யானை கருணைக்கிழங்கை சாப்பிடவே சாப்பிடாது
- மனிதனைப்போல பசி, வேதனை, மகிழ்ச்சி போன்றவற்றை யானையின் பிளிறல் சப்தம் மூலம் அறியலாம்
- நாக்கு கறுத்து காணப்பட்டால் அது தோஷமுள்ள யானை என்று அறியலாம்
- யானை குழந்தைகளிடம் மிகவும் பிரியமாக இருக்கும்.

பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு (1இரா.16:31).

2. இந்தத் திருமணம் அரசியல் காரணங்களுக்காக நடந்தது. இது ஆகாபுக்கு ஒரு அரசியல் கூட்டணியைத் தந்தது.

3. ஆகாப் ஒரு பெண்ணைத் திருமணம் செய்யவில்லை அவன் ஒரு மதத்தையே மணந்திருந்தான். தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை (1இரா.21:25).

கவனியுங்கள் பொல்லாப்பானதைச் செய்ய அவன் தன்னை விற்றுப்போட்டான்.

4. யேசபேலுக்கும் அவள் இலக்குகளுக்கு இடையே (தடையாக) எதுவும் நிற்கப்போவதில்லை.

**இ. புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு அந்த விதமான அர்ப்பணிப்பு வேண்டும்.**

**1. யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் (லூக்.14:26).**

2.யேசபேல் பாகாலுக்கு தன்னை சரணாக்கியதினால் கெட்டுப்போனாள்.

3. கிறிஸ்தவம் கெடுப்பதில்லை. அதற்கு உயர்ந்த குணங்களைக் கொடுக்கும் வல்லமை உண்டு.

**II கண்டனத்துக்குரிய தவறுகளையுடைய ஒரு போதகர்.**

**அ. தேவன் ஒவ்வொருவருக்கும் போதிக்கும் திறனைக் கொடுத்துள்ளார்.**

1. பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டும். (நீதி.22:6, எபே.6:1-4).

2. சத்தியத்தை மட்டுமே போதிக்கும்படி நமக்கு பொறுப்பளித்திருக்கிறார். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவா.8:32).

3. காலத்தைப் பார்த்தால் போதகர்களாயிருக்க வேண்டியவர்கள் இன்னுமில்லை என்று எபி.5:12-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

4. யேசபேல் போதித்தாள் ஆனால் ஒரு பொல்லாத மதத்தைப் போதித்தாள்.

**ஆ. யேசபேலின் வாழ்க்கையில் முற்றிலும் வீணான காரியங்கள்.**

1. பாகாலைத் தொழுது கொண்டதிலுள்ள அறிவற்ற தன்மை.

அ. அது பாலஸ்தீனத்தின் குளிர் மற்றும் கோடை காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஆ. அதிலே எல்லாவிதமான பாலியல் விக்கிரகங்களும் இருந்தன.

இ. அதிலே குழந்தைகளைப் பலியிடுவதும் இருந்தது.

2. மனிதன் செய்யக்கூடிய ஐசுவரியமாக்கும் பெரிய முயற்சி தேவனுடைய உண்மையான மார்க்கத்தைப் போதிப்பதே. பொய்யான மார்க்கம் மிகமிக மோசமான வீணான செயல்.

3. யேசபேல் திறமை வாய்ந்த பெண் அவள் தவறுகளை போதிக்க தன் வாழ்வை அர்ப்பணித்திருந்தாள்.

அ. அவள் தன்னுடைய சக்திகளை செம்மையான வழியிலே பயன்படுத்தியிருந்தாளேயாகில் தேவனுடைய இடத்திலே ஒரு புகழ்ச்சியுள்ள பிரதிநிதியாக நாம் மதித்திருப்போம்.

ஆ. நாம் அவளுக்காக பரிதபிக்கிறோம். இழிவாய்பேசுகிறோம். மேலும் தவிர்க்கிறோம்.

இ. மனிதன் தேவனைத் தொழுது கொள்ளவேண்டுமென்கிற ஆசையை சாத்தானால் எடுத்துவிட முடியாது. ஆனால் அந்த ஆசையை பொய்யான, புலன்களுக்கு திருப்தியான வாழ்க்கை மற்றும் வணங்குதலால் திருப்தியாக்க முடியும்.



அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து; பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்'' என்றார் (மத்.18:23-35). நாம் மற்றவர்களை மனப்பூர்வமாக மன்னிக்கும்போது நம்மையும் பிதாவாகிய தேவன் மன்னிப்பார். நாம் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே நமக்கும் அளக்கப்படும் என்பதை மறந்துபோகாதிருங்கள்.

மன்னிக்கிற விஷயத்தில் முதலாவது இருப்பவர், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துதான். நாமெல்லாம் அந்த அளவு மன்னிக்க மாட்டோம். ஏதாவது ஒன்றைச் சொல்லி. அவனை எப்படி மன்னிப்பது அவன் செய்த காரியம் உனக்கெல்லாம் தெரியாது. உனக்கு நடந்திருந்தால் தானே உனக்குத் தெரியும் என்று சொல்லி மன்னிக்காமல் பழைய காரியங்களை நினைத்து மற்றவர்களை குற்றப்படுத்திக்கொண்டே இருப்போம். இயேசுவை பிடித்து வாரினால் அடித்து முள்முடியை அவர் தலையில் வைத்து, அடித்து, அவமானப்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள். இத்தனை பாடுகளையும் அவர் பொறுமையுடன் சகித்தார். நம்மால் ஒரு வார்த்தையைக்கூட தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆண்டவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். அவரால் உண்டாக்கப்பட்ட மனிதர்கள் அவர்மேல் பாய்ந்து பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, அவரை சிலுவையில் ஆணியடித்து, அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும், சிலுவைகளில் அறைந்தார்கள். இதையெல்லாம் தாங்கிக்கொண்டு வேதனையோடு இருந்த கர்த்தராகிய இயேசுவானவர்; ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்'' (லூக்.23:34). இந்த மன்னிப்பின் வார்த்தையை நீங்களும் நானும் சொல்லமுடியுமா? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். மற்றவர்களை அந்த அளவுக்கு மன்னித்தார். அவர்களுக்காக பிதாவாகிய தேவனைநோக்கி வேண்டிக்கொள்ளவும் செய்தார்.

அதைப்போல அவருடைய சீடர்களில் ஒருவனாகிய ஸ்தேவான் ஒரு வல்லமையான பிரசங்கத்தை செய்துகொண்டிருந்தான். அதைக்கேட்டுக் கொண்டிருந்த ஜனங்கள் அவனுக்கு கொடுத்த பரிசு, அவனைக் கல்லால் அடித்தார்கள். அவன் இயேசுவின் உண்மையான சீஷனாக இருந்தபடியால் அவர்களை அவன் திட்டவும் இல்லை. அவர்கள் அடித்த கல்லை எடுத்து அவர்களை திரும்பவும் அடிக்கவுமில்லை. மாறாக ''அவனோ, முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டு சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்'' (அப்.7:60). ஆண்டவர் நமக்கு மாதிரியாக எவ்வளவோ போதனைகளை வைத்திருக்கிறார். அவைகளை புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் படிக்கிறோம். ஆனால் அவைகளின்படி நாம் நடக்கிறோமா என்றால், இல்லை. அநேகர் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் அவைகளின் படி நடப்பதில்லை. ஆனால் முதல் நூற்றாண்டு சீடர்கள் அந்தவிதமாக

நடந்தார்கள், அதை அப்படியே கைக்கொண்டார்கள். இயேசு சிலுவையில் மற்றவர்களை மன்னித்து ஜெபித்ததைப்போல இந்த ஸ்தேவான் தன்னை கல்லால் அடித்தவர்களுக்காக ஆண்டவரை நோக்கி ஜெபித்தான். இது மன்னிப்பின் மகத்தான செயலாக இருக்கிறது அல்லவா! நீங்கள் இந்த விதமாக உங்களுக்கு விரோதமாக இருப்பவர்களை மன்னிப்பீர்களா? அப்படி மன்னிக்கும்போது உங்களுடைய பாவங்களை கர்த்தர் மன்னிப்பார்.

மனந்திரும்பிய ஒரு மகனைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். அவன் தன்னுடைய பங்கை பிரித்துக்கொடுக்கும்படி கேட்டு வாங்கிக்கொண்டு தூரதேசத்திற்கு சென்று துன்மார்க்கமாய் வாழ்ந்து எல்லாவற்றையும் செலவு செய்தான். பணம் முற்றிலும் தீர்ந்தவுடன். பன்றிகளை மேய்க்கும் வேலையில் அமர்த்தப்பட்டான். பன்றிகளுக்கு கொடுக்கும் உணவுகூட அவனுக்குக் கிடைக்காமல் கஷ்டப்பட்டான். அப்பொழுது அவனுக்கு புத்தி வந்தது. நம்முடைய வீட்டில் வேலைக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். "நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்; தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி" மனந்திரும்பினான் (லூக்.15:18,19). இந்த மனிதனைப்போல மனந்திரும்பும்போது, பிதாவாகிய தேவன் நம்மையும் மன்னித்து, ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி தன்னிடம் வந்த அந்த குமாரனுக்கு அவன் தகப்பன் எப்படி விருந்து செய்தானோ அதைப்போல நமக்கும் பிதாவாகிய தேவன் செய்வார். புதிய மனிதனாக மாற்றப்படுவோம். நீங்கள் இன்றே மாற்றப்பட உங்களுடைய பழைய சுபாவங்களை விட்டு தேவனிடத்திற்கு திரும்புங்கள். மற்றவர்களை மன்னியுங்கள் அப்பொழுது உங்களுடைய தப்பிதங்களையும் கர்த்தர் மன்னிப்பார்.

**பரலோகத்தில் உள்ள தேவனைப்போல நாமும் பூரணமானவர்களாக மாற சாத்தியம் உண்டா?**

சாத்தியமில்லாத ஒன்றை வேதம் நமக்குப்போதிக்காது. நம்முடைய ஆண்டவரும் அதை சொல்லமாட்டார். அவரைப்போல நாம் ஒவ்வொருவரும் மாற்றப்படவேண்டும் என்பதுவே தேவனுடைய விருப்பம். ஆகையால் தமது ரூபத்தின்படியே நம்மை சிருஷ்டித்தார். "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத்.5:48). அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். நல்லோருக்கும் மழைபெய்கிறது தீயோருக்கும் மழை பெய்கிறது. மழை நமக்கு மட்டும் பெய்யவில்லை. இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். அவருக்கு வேண்டாதவர்கள் என்று ஒருவரும் பூமியில் இல்லை. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பதுவே அவருடைய விருப்பமாயிருக்கிறது. அவர் எப்படி இருக்கிறாரோ அதைப்போல ஒவ்வொருவரும் இருக்கவேண்டும். அவர் பூரண சற்குணராயிருப்பதுபோல நாமும் பூரண சற்குணராக மாறுவோம். அதற்காகவே ஆண்டவர் இயேசு இந்த உலகத்தில் வந்து மனிதனைப்போல மாமிசத்தில் காணப்பட்டு, மனிதர்களைப்போல உண்டு, உறங்கி, மனிதனுக்கு வரும்பாடுகளைப்போல அவருக்கும் பல பாடுகள் வந்தபோதும் அவைகளை




## பாடம் -12 யேசபேல் - பிசாசின் ஊழியக்காரி

## Jezebel - The Devil`s Missionary - *Jerry Bates*

-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை

**1இராஜாக்கள் 16:29; 22:40**



1. சுவிசேஷ ஊழியன் என்றால் என்ன?

2. தேவ ஊழியர் என்பதற்கு புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் கிரேக்க வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளதைப் பார்க்கிறோம். தேவ (சுவிசேஷ) ஊழியன் என்பதற்கு புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியுள்ள பல வார்த்தைகளை ஒருங்கிணைத்து பார்க்கும்போது பின் வரும் விளக்கத்துக்கு ஒருவர் வரலாம்.

ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் என்றால் தைரியமாக அன்போடும் திடநம்பிக்கையுடன் ஒட்டுமொத்த சுவிசேஷத்தையும் தைரியமாக அறிவிக்கின்ற கிறிஸ்துவைப் போன்ற ஒருவர். அவர் தன்னைக் கேட்கிறவர்களுக்கு சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதுடன் அவசியத்தைப் பற்றி புத்தி சொல்லி, சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அதில் நடக்க தேவன் கொடுக்கும் அழைப்பை நீடிக்கிற, வேதவசனத்தின் அதிகாரத்தோடு அனுப்பட்ட ஒரு தூதன்.

3. சாத்தானுக்கும் பிரசங்கங்களும் உண்டு. அவனைப் பற்றிய விளக்கம் இதைப்போலவே எதிர்மறையாக இருக்கும்.

4. வேதத்திலே தேவனால் படம் பிடித்துக் காட்டப்படுகிற பிசாசின் அசல் பிரசங்கம் உண்டு. அவள் தான் யேசபேல். யேசபேல் என்பதற்கு எபிரெய மொழியில் கற்பு, நற்பண்புகள் நிறைந்த, விக்கிரகாராதனை செய்யாத என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. கற்பனை செய்து பாருங்கள் முற்றிலும் தேவனற்ற ஒருத்தியை வேதம் பண்பு நிறைந்தவள் என்றழைக்கிறது.

5. அவள் மிகவும் வெற்றியுள்ளவளாக இருந்தாள். அநேகமாக ஒட்டுமொத்த இஸ்ரவேல் தேசத்தையும் பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிட வைத்துவிட்டாள்.

6. அவளை வெற்றியுள்ளவளாயிருக்கச் செய்தது எது? இந்த குணங்களில் சில நமக்குத் தேவை.

**I. பற்றி எரிகின்ற உற்சாகம்.**

**அ. அர்ப்பணிப்பு**

1. அவள் மேலோட்டமாக சிந்திப்பதில்லை. சில சமயம் பரபரப்படைவாள். சில சமயம் அப்படியல்ல.

2. அவளுடைய மதத்தில் ஒரு அங்கமாக மட்டுமல்ல அதில் நீடித்திருக்கிறவளாக இருந்தாள்.

3. யேசபேலின் தகப்பன் சீதோனின் அரசனாகிய ஏத்பாகால் யோசிபஸ் என்பவரின் கூற்றுப்படி அவன் அஸ்தோத்தின் பூசாரி. அவன் தன் மகளுக்கு நன்கு போதித்திருந்தான்.

4. அவள் முற்றிலும் அல்லது ஒன்றுமில்லாத பாகாலின் ஆதாரவாளராக இருந்தாள். அவள் எப்போதும் எந்தப் பக்கம் இருந்தாள் என்பது உங்களுக்குத் தெரியும்.

**ஆ. அவள் குடும்பத்தைவிட அவளுடைய மதம் அவளுக்கு முதன்மையானது.**

1. அவள் ஆகாபை மணந்தாள். அவளோடு வந்த ஆழ்ந்த காதல் ஆகாப் மீதல்ல பாகால் மீது இருந்தது. அவளுடைய திருமணம் எப்படி விவரிக்கப்பட்டிருக்கிறதென்று கவனியுங்கள். நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்கு கொஞ்ச காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல் அவன் போய்

தேடினால் போதாது என்று யூதாவையும், எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கியிருக்கிறான். எத்தனை அருமையான செயல் இது! தேவையற்ற சுரூபங்கள் விக்கிரகங்களை அகற்றி சுத்திகரிப்பது அதிக அவசியமல்லவா? இன்றைய நாட்களில் மாய்மாலமான, வீணான ஆராதனை செய்யும் மக்களை ஜீவனுள்ள தேவன் அண்டைக்கு திருப்பி அவர்கள் சுத்திகரிக்கப்பட உதவுவது உங்களுடைய பிள்ளைகளின் பணி என்பதை மறந்துவிடவேண்டாம். அநேக தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்து பெரிய பெரிய கற்பனையில் இருக்கலாம். என் பிள்ளை விஞ்ஞானி ஆக வேண்டும், டாக்டராக வேண்டும், கலெக்டர் ஆக வேண்டும், ஐ.பி.எஸ் ஆக வேண்டும் என்று பல்வேறு கற்பனைகளில் இருப்பீர்கள். நல்லது! ஆனால் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: “அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்” (லூக்.10:2) என்று கூறின சப்தம் உங்கள் காதில் விழவில்லையா? யோசியா ராஜாவாக இருந்து கொண்டே மற்றவர்களை சுத்திகரிக்கத் தொடங்கினானே! உங்கள் பிள்ளைகளையும் அவ்விதமாய் கர்த்தருக்கென்று மனுஷரைப் பிடிக்க அனுப்பலாமே.

கடைசியாக, கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளின்படியே தான் செய்வதினாலே, கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணி எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படபண்ணினான்” அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் (இஸ்ரவேல்) தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுப் பின்வாங்கின தில்லை” (வச.31-33). இவனுடைய நற்சாட்சியான ஜீவியம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் திருஷ்டாந்தமாயிருக்கிறதல்லவா?

அன்புச் சகோதரியே, உங்களுடைய பிள்ளை எப்படி நடக்கிறார்கள் என்று கருத்தாய் கவனியுங்கள். அவர்கள் இந்த யோசியாவைப் போல, காயுவைப்போல சத்தியத்திலே நடந்து உங்களை மகிழ்விக்கவும் உங்களுடைய பிள்ளைகள் நாளைய, இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கவும் கர்த்தர் கிருபை செய்வாராக!

**ஜெபியுங்கள்**

- இம்மாத ஊழியங்களுக்காக...
- புதிய ஆத்துமாக்களுக்காக...
- வேன் ஊழியத்திற்காக...
- வேதாகம பள்ளிக்காக...
- வானொலி மற்றும் தொலைகாட்சி ஊழியங்களுக்காக...
- நமது மாத இதழின் வாசகர்களுக்காக...
- இந்திய தேசத்தில் தடையில்லா சுவிசேஷ ஊழியம் நடைபெற...





யெல்லாம் ஜெயித்து நமக்கு மாதிரியை பின்வைத்துப்போயிருக்கிறார். அந்த அடிச்சுவடை நாம் தொடர்ந்து சென்று கிறிஸ்துவின் வெற்றி வீரர்களாக இப்பூமியில் தேவசித்தம் செய்யவேண்டும். பூமிமுழுவதும் கர்த்தரை அறிகிற அறிவில் வளர நீங்களும் நானும் ஒவ்வொருநாளும் பாடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

**மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? – ரோமர்2:21**




# ஆசிரியர் என்பவர் யார்?

## What is a Teacher?

1. ஆசிரியர் என்பவர் மற்றவர்களின் எல்லையற்ற தன்மையை நிர்ணயிப்பவர்.
2. ஆசிரியர் என்பவர் மற்றொன்றை கற்க உதவுபவர்.
3. ஆசிரியர் என்பவர் அறிவை பகிர்ந்தளிப்பவர்.
4. ஆசிரியர் என்பவர் அவனுடைய தேவைக்கு இன்னொருபலனை அறியச் செய்கிறவர்.
5. ஆசிரியர் என்பவர் மற்றவர்களை சரிசெய்கிறவர்.
6. ஆசிரியர் என்பவர் கற்பித்தல் / கற்றல் ஒழுங்குகளுக்கு செய்முறை, அமைப்பு அல்லது படக்காட்சி மூலம் புகட்டப்படும்கல்வியை விட மிகவும் முக்கியமானவர்.
7. ஆசிரியர் என்பவர் நேர்மையானவற்றின் உற்பத்தி பொருளாவார்.
8. ஆசிரியர் என்பவர் திறமையிலிருந்து திறமைகளை வெளிக்கொண்டுவரும் திறமையுள்ளவர்.
9. ஆசிரியர் என்பவர் பாடத்திட்டத்தின் 90சதவிதம் ஆவார்.
10. ஆசிரியர் என்பவர் சிந்திக்க தூண்டுபவர்.
11. ஆசிரியர் என்பவர் ஆத்துமாக்களை வடிவமைப்பவர்.
12. ஆசிரியர் என்பவர் பூமியில் தேவனுடைய ஸ்தானாபதியாயிருப்பவர் (2கொரிந்தியர்5:20).

# பிரசங்கியார்களுக்குப் பயிற்சி
# *Training Preachers*

*J.C.Choate*



பிரசங்கியார்களுக்கு பயிற்சி அளிப்பதின் அவசியத்தை பற்றி சிந்திப்போம். நாம் முன்னமே சொன்னபடி பிரசங்கியார்கள் தானாகவே வருவதில்லை. கர்த்தரும் அவர்களுடைய மனங்களைத் திறந்து அந்தந்த வாரம்செய்ய வேண்டிய பிரசங்கத்தை ஊற்றுவதில்லை. நல்ல பிரசங்கியார்கள் அநேக வருஷ கடின உழைப்பினால் உருவாகிறார்கள். இளம் பிரசங்கிகள் தங்களுடைய வேதத்தை வாசித்து கற்று தாங்கள் சார்ந்திருக்கும் பிராந்திய சபையில் அநேக வழிகளில் உதவியாய் இருக்கலாம். பிரசங்கியார் பயிற்சி பள்ளி அங்கே இருக்குமானால் சென்று இரண்டு மூன்று ஆண்டு படிக்கலாம்.

ஆனால் பொதுவாக பிரசங்கியார்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சியைப்பற்றி எப்படி? நாடெங்கிலும் உள்ள பிரசங்கியார்கள் தேவையான பயிற்சி பெற்றுக்கொள்ளும்படி எப்படி அவர்களுக்கு உதவலாம்.

பிராந்திய சபையே ஒருசிறந்த பிரசங்கியார் பயிற்சிபள்ளி. அங்கே கொடுக்கப்படுகின்ற பயிற்சி எப்போதும் கிடைக்கும். ஒருவருக்கு அல்லது எத்தனைப்பேருக்கு வேண்டுமானாலும் பயிற்சி அளிக்கலாம். பிராந்திய சபையார் தங்களிடமுள்ள வாலிபர்களை பிரசங்கிக்கும்படி உற்சாகப்படுத்தலாம். ஆம் அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மருத்துவராக, ஆசிரியர்களாக, வழக்கறிஞர்களாக, வியாபாரிகளாக அல்லது மற்ற பெரிய வேலைகளில் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஏனென்றால் அப்படிப்பட்ட வேலைகளில் நல்ல வருவாயும் சமூக அங்கீகாரமும் இருப்பதே அதற்குக் காரணம். ஆனால் வாழ்க்கையில் அதிக பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் நிறைய உண்டு. நீங்கள் ஏன் உங்கள் வாலிபர்களையும் உங்கள் வாலிப ஸ்திரீகளையும் பிரசங்கியார்களுடைய மனைவிமார்களையும் உற்சாகப்படுத்தக் கூடாது. போதிப்பதும் கர்த்தருடைய பணியைச் செய்வதுமே இந்த உலகத்தில் மிகப்பெரிய வேலை. பிரசங்கியாராக இருப்பதென்பது கனத்துக்குரிய ஏற்புடைய வேலை. இதிலே அதிகமான சம்பளம் கிடைக்காமலிருக்கலாம் அநேக தியாகம் செய்ய வேண்டியிருக்கலாம் அந்த சூழ்நிலையிலும் இது தகுதியான வேலை. சபையில் உள்ளவர்கள் தங்கள் வாலிபர்களையும் வாலிப பெண்களையும் இந்த திசையில் ஊக்கப்படுத்தினால் அபாரமான மாற்றத்தைக்காணலாம்.

சபையிலே ஒன்று இரண்டு வாலிபர் பிரசங்கியாராகும் பட்சத்தில் முழுசபையும் இதை ஊக்கப்படுத்தலாம். பலவிதமான கூட்டங்களில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம். அவர்களுக்கென்று ஒரு பயிற்சி வகுப்பு இருந்தால் அங்கே அவர்கள் படித்து வேதவகுப்புகள் எடுத்து போதகர் அவைகளைக் கவனித்து அவர்களுக்கு ஆலோசனை சொல்லலாம். சபையினுடைய தலைவர்கள் அவர்களுக்கு அவ்வப்போது பிரசங்கிக்கும்படியான வாய்ப்பளிக்கலாம். அவர்கள்



ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள்'' என்ற வசனம் உங்கள் வாழ்விலும் நிறைவேறும். பழைய ஏற்பாட்டு காலத்தில் யோசியா என்ற ராஜா எட்டு வயதில் ராஜாவாகி முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான். இவனுடைய சிறுபிராயமும், வாலிபப் பிராயமும், ஏன் இவனுடைய முழு வாழ்வும் மிகச் சிறப்பானதாக இருந்தது. தாய்மார்களாகிய உங்களுக்கு இவனுடைய காரியங்கள் நிச்சயமாகவே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும், இவனுடைய நற்கிரியைகளைக் குறித்து 2நாளாகமம்34-ம் அதிகாரத்தில் வாசிக்கலாம்.

முதலாவதாக, தான் எட்டு வயதுடையவனாயிருக்கும்போதே ''அவன் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில் வலது இடதுபுறமாக விலகாமல் நடந்தான்'' (2நாளா.34:2) சிறுவயது தொடங்கியே கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, அது மாத்திரமல்ல ஒரு நல்ல மாதிரியாகிய தாவீதின் வழிகளில் நடந்தான் என்று வாசிக்கிறோம். உங்களுடைய பிள்ளைகள் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறார்களா? நல்ல மாதிரியை பின்பற்றுகிறார்களா? மாறாக, இன்றைய அருவருப்பான உலகில் கெட்ட வழியில் நடந்து கெட்ட நண்பர்களை மாதிரியாகக் கொண்டிருக்கிறார்களா? உங்கள் பிள்ளைகள் உலகத்தை சிநேகிக்கத் தொடங்கும் முன் அணைபோடுங்கள். சிறுவயதிலேயே கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானவற்றைக் கற்றுக்கொடுங்கள்.

இரண்டாவதாக, ''அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து'' (வச.34:3). அதாவது தன்னுடைய 16வது வயதில், இளமைப் பருவத்தில் தன் தேவனைத் தேட ஆரம்பித்தான். நாம் வணங்கும் தேவன் கண்களிருந்தும் காணாத, காதுகளிருந்தும் கேளாத, கால்களிருந்தும் நடக்கமாட்டாத, மூக்கிருந்தும் முகராத ஒரு உயிரற்ற விக்கிரகமல்ல. நம் தேவன் அண்டசராசரங்களையும் படைத்த பரிசுத்தமுள்ள தேவன். இந்த தேவனைத் தேட ஆரம்பித்தான் யோசியா என்ற அந்த இஸ்ரவேல் ராஜா. பரிசுத்தமுள்ள தேவனைத் தேடினால் பரிசுத்த வாழ்வு கிடைக்குமல்லவா! ''நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' (1பேது.1:16). வாலிபப் பிள்ளைகள் தன் இருதயத்தின் நினைவுகளுக்கேற்ப பொல்லாதவற்றையும், அருவருப்புகளையும் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பிள்ளைகளுக்கு உண்மையுள்ளவரும், பரிசுத்தமுள்ளவருமாகிய அந்த ஒரே தேவனைத்தேட கற்றுக்கொடுங்கள். அப்பொழுது நீங்கள் மகிழுவீர்கள்.

மூன்றாவதாக, ''...பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்'' (வச.34:3). அதாவது, தன்னுடைய 20வது வயதில் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான். இது நன்மை தீமை அறியத்தக்க வயது என்றுகூடச் சொல்லலாம், தான் மட்டும் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தேவனைத்

பெண்கள் பகுதி

## உங்கள் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்களா?

Your Children walk In Truth? - J.GloryArjunan



அன்பான சகோதரிகளே, உங்களுடைய பிள்ளைகள் எப்படி நடக்கிறார்கள்? நடக்க வேண்டிய வழியிலே நடக்கிறார்களா? அவ்வாறு நடக்கவேண்டிய வழி எதுவென்று கேட்கலாம். இயேசுவின் அப்போஸ்தலனாகிய யோவான் சத்தியத்தின்படி நேசித்த காயு என்பவனைக் குறித்து, "சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்" (3யோவா.3) என்று எழுதியுள்ளார். ஒவ்வொரு தாயும் தன் பிள்ளைகளைக் குறித்து மற்றவர்கள் நற்சாட்சி கொடுக்கும்போது மிகவும் சந்தோஷப்படுவார்கள். ஆனால் இன்றைய நாட்களில் அநேக பிள்ளைகள் பெற்றோருக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. தன் இஷ்டம் போல் வாழ்நாட்களை கழித்து, பாவத்தைத் தண்ணீரைப்போல பருகி முடிவில் தானும் கண்ணீர் வடித்து, தன் பெற்றோரையும் கண்ணீர்வடிக்கச் செய்கின்றனர். காரணம் என்ன? தன் பிள்ளைகளை அவர்களுடைய இஷ்டத்திற்கு விட்டுவிடுவது தான். சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் கண்டிப்பில்லாமல் வளர்க்கப்படுகின்றனர். அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் நற்காரியங்களைச் செய்தாலும் பூரிப்படைவார்கள், துற்காரியங்களைச் செய்தாலும் அளவில்லா மகிழ்ச்சியடைவார்கள் இப்பேர்பட்டவர்களை நான் கண்டுள்ளேன். நீதிமொழிகள் 29:15-ல் "...தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்" என்கிறது. அன்பு சகோதரியே, ஜாக்கிரதையாயிருங்கள் உங்கள் பிள்ளைகள் எப்படி நடக்கிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள், எப்படி உடுத்துகிறார்கள் என்பதை கண்காணிக்க வேண்டியது உங்கள் கடமை என்பதை மறந்துவிடாதீர்கள். இல்லையேல், மேற்குறிப்பிட்ட வசனத்தின்படி வெட்கமடைய வேண்டியநிலை ஏற்பட்டுவிடும்.

தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள பிள்ளைகளின் ஆத்துமாக்கள் கர்த்தருடையது. கர்த்தருடையதை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், சத்தியத்தை அறிகிற அறிவிலும் வளர்க்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். பிள்ளைப் பாசம் கண்ணை மறைக்கும் என்பர். அந்தப் பாசம் உங்கள் பிள்ளைகள் பாவத்திற்குள் வழுக்கி விழக் காரணமாகிவிடக்கூடாது.

பரிசுத்த வேதாகமம், பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும், எப்படி ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாக அவர்களை வளர்க்கவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும், நல்ல உதாரணங்களையும் நமக்குப் கொடுக்கிறது. பரிசுத்த வேதாகமத்தை கற்றுக்கொண்டு அதற்கேற்ப ஜெபத்திலும், பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் பிள்ளைகளை வளர்க்கப் பிரயாசப்படும்போதும் நீதிமொழிகள்23:24,25-ன்படி, "நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்;



பிராந்திய சபையின் பிரசங்கியாரோடு வீடுகளைச் சந்திக்கச் செய்யலாம், வேத வினாப்போட்டிகளில் கலந்து கொண்டு வாலிபர்களை உற்சாகப்படுத்தலாம் மேலும் பல நற்காரியங்களைச் செய்யலாம். நாம் பிரசங்கிக்க விரும்புகிறவர்களுக்கு ஒரு பரிபூரணமான பயிற்சி கூடமாக பிராந்திய சபை இருக்க முடியும். நாடெங்கிலும் உள்ள கிறிஸ்துவின் சபைகள் இந்த விதமான பயிற்சியின் திட்டங்களை விருத்தி செய்யுமென்றால் தங்கள் சொந்த தேவைகளை பூர்த்தி செய்தது போக வெளியேயும் சென்று ஊழியம் செய்யும்படி அனுப்பலாம். பல வருஷங்களில் மிக அதிகமான பிரசங்கியார்களை உருவாக்கிய சபைகளை நான் அறிவேன். அதே சமயத்தில் ஒரு பிரசங்கியாரைக்கூட உருவாக்காத சபையையும் நான் அறிவேன். இந்த சபைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் என்ன? வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால் பிரசங்கியார்களை உருவாக்கிய சபைகள் தங்கள் வாலிபர்களை பிரசங்கிக்கவும், அவர்கள் பிரசங்கியாராகவும் உருவாக உதவிய சபைகளே. பிரசங்கியார்களை உருவாக்காமலும் உருவாக்குவதற்கான பணிகளைச் செய்யாமலும் இருந்த சபைகள் தங்களிடமிருந்து பிரசங்கியார்களை அனுப்பாதவர்கள்.

வாலிபர்கள் பிரசங்கிக்கும்படியாக விஷேசித்த பயிற்சி அளிக்கக் கூடிய பள்ளிகளுக்குச்சென்று பயிற்சி பெறலாம். சக வாலிபர்களோடு சேர்ந்து விடுதியில் தங்கி வேத வகுப்புகளுக்குச் சென்று இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து படிக்ககூடிய இடமாக அது இருக்கும். அவர்களுடைய ஆசிரியர்கள் பிரசங்கியார்களாக இருப்பார்கள். அங்கே இருக்கும்போது தங்கள் ஆசிரியர்களோடும் மற்ற பிரசங்கியாரோடும் பிரசங்கிக்கிற வாய்ப்புகளைப் பெறலாம். இந்த விதமான பள்ளிகளில் படிப்பதினால் ஒருவர் திறமையான பிரசங்கியாராக வரமுடியாது. ஒவ்வொரு மாணவன் மீதும் அநேக பொறுப்புகள் சார்ந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் வெற்றிபெறும்படியாக மிகவும் கடினமாக தாங்கள் கற்றவைகளின்படி உழைக்க வேண்டும். மிகவும் சிறப்பாக செயல்படும்படி கற்று அவைகளை பயன்படுத்த வேண்டியது அவர்களைப் பொருத்ததே.

சபையானது வளர்ச்சியடையாத நிலையில் தேவைப்பட்டபடி தங்கள் பிரசங்கியார்களுக்கு பொருளாதார ரீதியில் உதவி செய்ய முடியாத நிலையில் தங்களிடமிருந்து பயிற்சி பெற்று வரும் இளம் பிரசங்கியார்களுக்கு அவர்கள் பொருளாதாரரீதியில் உதவி செய்யமுடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்யலாம்? ஒரே மாற்றுவழி மேல் நாடுகளிலிருந்து உதவியைப்பெறுவது. இதிலும் அநேக பிரச்சனைகள் இருப்பதால் இதுவே ஒரு சரியான தீர்வாகாது. கர்த்தரை நேசித்து அவருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்துக் கொண்டு அதே சமயத்தில் உதவியும் பெறுவதற்கு அநேக வழிகள் உண்டு. அப்படிப்பட்ட இளைஞர்கள் உலக சம்பந்தமான வேலைகளில் இருந்து கொண்டு சபையானது அவர்களுக்கு முழுமையாக உதவியளிக்கும்வரை பிரசங்கம் செய்யலாம். பின்பு சபையின் முழுஉதவியோடு முழுநேர ஊழியத்தைச் செய்யலாம்.

சபையானது வளர்ச்சியடையும்போது அதனுடைய அநேக அங்கத்தினர்களோடு ஒரு கிறிஸ்தவ கல்லூரியை நிறுவி குறிப்பிட்ட காலத்தில் இந்த விதமான அநேக கல்லூரிகள் வாலிப ஸ்திரீகளுக்கும் பயிற்சியும் கல்வியும்

அளிக்கலாம். இடைப்பட்ட காலத்திலே ஒவ்வொரு பிரசங்கியாரும், சபையும் சுவிஷேசத்தை பிரசங்கிக்கும்படி, இந்த விதமான பயிற்சியை இளைஞர்களுக்கு அளிக்கும்படியான அவசியத்தை உணர்ந்து தங்கள் வாலிபர்களை இதற்காக தங்களால் ஆனதை செய்யும்படி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

வாலிபபிரசங்கியார்களாகிய தீமோத்தேயு, தீத்து மற்றும் அநேகரோடு பவுல் எப்படி பணிசெய்தார் என்பதை கவனித்துப் பாருங்கள் 1,2 தீமோத்தேயு, தீத்து ஆகிய புஸ்தகங்களில் நன்றாக படித்துப் பாருங்கள்.

*சென்றுபோன நாள் திரும்பவும் வராது. இது என்ன எனக்குத் தெரியாதா என்று சொல்லாமல் ஒவ்வொருநாளும் தேவனுக்கு நன்றி சொல்லி அவருக்குப்பிரியமானதை செய். பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் பெருகும். நீங்கள் எதைச் செய்தாலும் கர்த்தருக்காகவே செய்யுங்கள்.*



## யோப்பா பட்டணம்

சாலொமோன் காலத்தில் தேவாலயம் கட்ட லீபனோனின் மரங்கள் கடல் வழியாய் யோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்டு எருசலேமுக்கு தரைமார்க்கமாய் எடுத்துச் செல்லப்பட்டன. யோனா தர்ஷீசுக்குப் போக கப்பல் ஏறியதும் இங்கேதான். தொறகாள் என்ற பெண் வாழ்ந்ததும் இப்பட்டணத்தில் தான் (அப்.9:36-43). பேதுரு தங்கியிருந்த சீமோனின் வீடும் இந்தப் பட்டணத்தில்தான் இருந்தது. பேதுரு தரிசனம் கண்டதும் இங்கேதான் (அப்.10:15-16).

### கர்த்தர் உன்னை ஆசீர்வதித்திருக்கிறாரா...

*வாழ்க்கையிலே, உணவிலே, உடல்நலத்திலே, ஆறுதலிலே, உன் விண்ணப்பத்திற்குப் பதிலளித்தலிலே மேலும் ஆயிரக்கணக்கான வழிகளிலே கடந்த வாரத்தில்? அவருடைய கட்டளைக்குக் கவனம் செலுத்தி "பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தம் செய்ய" (மத்.7:2) உன்னாலான மட்டும் நலமானதைச் செய்வதின் மூலம் "உமக்கு நன்றி, கர்த்தாவே" என்று நீ சொல்லாமே. பலனோ மிகப்பெரிய ஆசீர்வாதம்! –*
**TVOTI**



பெண்கள் பகுதி

## துணையில்லா இடங்கள்

### The Lonely Places



*எனது மனதின் துணையில்லா இடங்களில்*
*நடக்கிறேன் நான் உம்மோடு*
*இருண்டுபோன சாலைகளிலும்*
*அமைதியான நீரோடை அருகிலும்*
*விண்மீன்கள் மறைந்திருக்கிற*
*இருள் சூழ்ந்துகொண்ட ஆகாயங்களின் கீழும்.*

*நடக்கிறேன் நான் உம்மோடு*
*துணையில்லா கும்பல்களிலும்*
*சுழன்றடிக்கின்ற உறைபனி பொழியுமிடத்திலும்*
*மனதை வாட்டுகின்ற இரவின் சப்தங்களினிடத்திலும்*
*வெறுமையான காற்று நிரம்பி*
*வளைந்துபோன மரங்களினிடத்திலும்*
*காற்று மற்றும் மழையின் அடியிலும்;*

*நடக்கிறேன் நாம் உம்மோடு*
*சமாதானத்தை அனுபவித்து*
*இல்லாமையில், உள்ளே:*
*நான் உணருகிறேன் உமது அன்பை*
*மேலும், கேட்கிறேன் சாந்தமுள்ள பாடலின் இனிய தாளமான*
*உமது குரலை*
*சகோதரத்துவத்தில்,*
*மதிப்புமிகுந்த, எனக்குப் பிரியமான*
*அழகின், ஆற்றலின் மனோ வார்த்தைகளில்*
*என் ஆத்துமாவை தாங்கும் எண்ணங்கள்*
*என் மனதின் துணையில்லா இடங்களை நிரப்பும்.*

*-Betty*

### தேவன் விரும்பாத சமாதான ஒப்பந்தம்

*-M.Rajamani*

கிறிஸ்துவுக்குள் பிரிமான சகோதர சகோதரிகளே, இன்று அநேக குடும்பங்களில் சமாதானக் குறைவு ஏற்பட்டு பிரச்சனைகள், பிரிவினைகள் உண்டாகின்றது. பிரச்சனைகள் மாமியார் மருமகள், தகப்பன் மகன், தாய் மகள், அண்ணன் தம்பி, இப்படி பல்வேறு தரப்பிலும் சமாதானக் குறைவு ஏற்படுவதை காண்கிறோம். இதனால் ஒருவிதமான பயம் எல்லாருக்கும் ஏற்படுவதும் உண்மை. இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரக்கூடாது என்பதற்காக கர்த்தர் விரும்பாத அருடைய கட்டளைகளை மீறி நாம் மற்றவர்களுடன் எழுத்தப்படாத சில ஒப்பந்தங்கள் செய்து கொண்டு, பொய், பித்தலாட்டங்கள் செய்தும் நமக்கு ஒரு சமாதானத்தை உருவாக்கிக் கொள்கிறோம். உதாரணமாக கணவன்: தான் தப்பித்துக்கொள்ள ஒரு பொய் சொல்ல சொன்னால், மனைவி அதை அப்படியே சொல்லி விடுவார்கள். அதுபோல பிள்ளைகளை காப்பாற்ற பெற்றோர் பொய் சொல்லி விடுவார்கள். இது எந்த வகையில் கர்த்தருக்குப் பிரியமான காரியம் ஆகும்? இதில் அவர்களுக்கு சாதகமாக பொய் சொல்லிவிட்டால் சமாதானம் போய் சண்டை ஏற்பட்டுவிடும் என்று பயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சமாதான ஒப்பந்தங்களை கர்த்தர் விரும்புவது கிடையாது.

ரிக் வேதத்தில் குறிப்புகள் (போப்புல் ஊவிலிருந்து). ரிக் வேதத்தில் இந்த குறிப்பு (1.45; 2.33) இந்து மதத்தை குறித்து அது சொல்கிறது. மானு என்ற ஒரு மனுஷனை குறித்து அது பேசுகிறது. மானு என்பவர் ஒரு மாபெரும் துறவியாக இருந்தார். ஒரு தீர்க்கதரிசியைப் போன்று இருந்தார். அவர் மூலமாக தேவர்கள் பேசினார்கள். அவருடைய தகப்பனார் சூரியன், அவருடைய பாட்டனார் (தாத்தா) பிரம்மா (இந்து மதத்தின் சிருஷ்டிப்புக்கான கடவுள்) ஆனால் அவன் இவர்கள் இருவரை பார்க்கிலும் இயன்றவரையில் எது வேண்டுமானாலும் செய்வதிலும், அவனுடைய பெருங்கஷ்டங்களிலும், மிகவும் எளிமையாக இருப்பதிலும் அவர்கள் இருவரையும் மிஞ்சினவனாகவும் இருந்தான். அவன் தன்னுடைய ஒரு காலால் பத்தாயிரம் ஆண்டுகளாக நின்று கொண்டிருந்தான். (ஜே.எம்.மேக்ஃபீ எழுதிய இந்தியாவின் புராணக் கதைகளும் பழங்கதைகளும்).

பழங்கதையின்படி ஒரு மீன் மானுவிடம் சொன்னது, "உலகத்தின் அழிவு சமீபமமாயிருக்கிறது... மானு தன்னுடைய ஜீவனை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமேயாகில் அவர் நெருங்கிக் கொண்டிருந்த சூறாவளியையும், புயலையும் தாக்குப்பிடிக்க தக்கதாக ஒரு பெரிதும் வல்லமை நிறைந்ததுமான படகை உருவாக்க வேண்டும் என்று அவர் பெற்றுக் கொண்ட போதனைக்கு இணங்க மானு ஒரு பேழையை உருவாக்கினார், எல்லாவகையான விதைகளையும் அதற்குள்ளாக சேமித்தார், பின் அலை மேலும் கடலிலே அவர் பிரயாணத்தை தொடங்க தயாரானார்.

பல வருஷங்களுக்கு பின்பு கப்பலானது "மதுபானம் பண்ணிய ஒரு வேசிக்கு ஒப்பாக" தடுமாறியது. எல்லா ஜீவன்களும் அழிக்கப்பட்டன தண்ணீர்கள் பலம் குன்றத் தொடங்கிய பொழுது ஒரு மீனானது பேழையை இமயமலைக்கு இழுத்து சென்றது. கப்பலை ஒரு மரத்தினிடமாக நங்கூரம் பாய்ச்சும்படி மானுவுக்கு உத்திரவிடப்பட்டது.

சகலமும் ஜலம் பிரளயத்தில் அமிழ்ந்துபோனபடியால், மனித இனத்தில் இப்பொழுது மானு மாத்திரமே ஜீவனோடு உள்ளவராக இருந்தார். தன்னுடைய பிள்ளைகளை பாதுகாக்க தக்கதாக சுத்தமான வெண்ணெய், புளித்த பால் மற்றும் தயிரை ஜலத்தில் எறிந்தார். ஒரு ஸ்திரீயாக உருவாயின, அவள் மூலமாக ஒரு புதிய மனித இனமும் பிறந்தது. இந்த வாக்கியங்களின்படி இது உலகளாவிய ஜலப்பிரளயம் மற்றும் அதன் பின் விளைவாக இருக்கிறது.

*கிறிஸ்துவின் வசன மாத இதழ் மற்றும் அதன் மூலமாக நடத்தப்படும் அனைத்து கர்த்தருடைய பணிக்கும் உதவக்கூடிய கர்த்தருடைய சபைகளையும், கர்த்தருடைய மக்களையும் வரவேற்கிறோம்.*

*உங்களுடைய உதவிகளை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ* **THE WORD OF CHRIST** *என்ற பெயரில் அனுப்பிவையுங்கள்.*

*நன்றி.* ***–ஆசிரியர்***

**Editor, THE WORD OF CHRIST, P.O.Box 5, BATLAGUNDU - 624 202**



## ஆசிரியர் கடிதம்

**இ**ந்த மாத இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

நீங்கள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" மாத இதழை தொடர்ந்து பெற்று வருவீர்கள் என்று நம்புகிறோம். ஒவ்வொரு முறையும் எங்களோடு தொடர்புகொள்ளும்போது உங்களுடைய Ref.No யை எழுதி தொடர்பு கொள்ளவும். ஒன்றுக்கு மேற்பட்ட இதழ் வந்தால் அதையும் எங்களுக்குத் தெரியப்படுத்தவும். மற்றவர்களுக்கு இவ்விதழை கொடுத்து ஆண்டவருக்கு ஊழியம் செய்து அவருடைய வசனம் பரம்பி மகிமைப்பட உதவிசெய்யுங்கள்.

உங்களுடைய நண்பர்களுக்காக நீங்கள் சந்தா செலுத்தி, அவர்களுடைய தெளிவான முகவரியை எழுதி அனுப்பி அவர்களும் சத்தியத்தை அறிந்துகொள்ள உதவி செய்யலாம். இது இப்பூமியில் உங்களுக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். World Evangelism Bible School பள்ளி நடைபெறுகிறது. உங்களுக்கு தெரிந்த வாலிப சகோதர சகோதரிகள் மற்றும் ஊழியத்தில் வாஞ்சையுள்ளவர்கள் இருந்தால் எங்களோடு இந்த No. 94435 58041 -ல் தொடர்பு கொண்டு, பள்ளியில் சேர்ந்து படித்து ஆண்டவருக்கு ஊழியம் செய்யலாம்.

மேலும் உலகத்தால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள் இருந்தால் எங்ளோடு தொடர்புகொண்டு தெரியப்படுத்துங்கள். ஜெபிக்கிறோம்.

## கிறிஸ்துவே...

## Christ Is...

**கிறிஸ்துவே வழி –**
அவரின்றி மனுஷர் காயினைப் போல நாடோடிகளும், சோம் பேறிகளும் ஆவர்.

**கிறிஸ்துவே சத்தியம் –**
அவரின்றி மனுஷர் பொய்யர், சாத்தானைப்போல ஆவர்.

**கிறிஸ்துவே ஜீவன் –**
அவரின்றி மனுஷர் பாவத்தில் மரித்தவர் ஆவர்.

**கிறிஸ்துவே ஒளி –**
அவரின்றி மனுஷர் இருளில் நடக்கிறவரும், போகும் வழியை அறியாதிருக்கிறவரும் ஆவர்.

**கிறிஸ்துவே திராட்சைச் செடி –**
அவரில் இல்லாத மனுஷர் அக்கினிக்கு ஆயத்தமான இலையுதிர்ந்த கிளைகள் ஆவர்.

**கிறிஸ்துவே கன்மலை –**
அவர்மேல் கட்டப்படாத மனுஷர் நியாயத்தீர்ப்பின் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுவர்.

**– TVOTI**

தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது. ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041



பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

## Can Man Find the Way to God?

*-Betty*

### பாடம் -4 உலகளாவிய ஜலப்பிரளயம்




**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

101. உயர்ந்த நிலத்தின் மேலும், சமவெளியிலும். ஸ்தானாபதிகளாக கிரமமாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள்.

106. ஆதாத்தின் சுழல் காற்று (அல்லது புயல்) வானம் வரைக்கும் அடித்துக்கொண்டு சென்றது.

107. ஒவ்வொரு ஒளிச்சுடரும் இருளாக மாறியது.

108. ....நிலம்.... அது வீணானதாக விடப்பட்டிருந்ததானால்

109. ஒரு முழுநாள் அளவில் (வெள்ளம் திடீரென்று தாக்கியது)

110. வெள்ளம் வேகமாக உயர்ந்தது, (ஜலம்) பர்வதங்களை சென்றடைந்தது.

111. (ஜலம்) ஜனங்களை ஒரு யுத்தத்தைப்போல தாக்கியது.

112. சகோதரன் தன்னுடைய சகோதரனை பார்க்கவில்லை.

113. மனுஷர்கள் அறியப்படாதிருந்தார்கள் வானத்தில் (அல்லது அடையாளங் காணப்படாதிருந்தார்கள்)...

128. ஆறு நாட்கள் இரவும் பகலுமாக

129. காற்றும், புயலும் வலிமையாக அடித்தது, சுழல் காற்று தேசத்தை மேற்கொண்டது.

130. ஏழாம் நாள் ஆனபொழுது புயல், சூறாவளி மற்றும் யுத்தத்திற்கு முடிவு வந்தது.

131. அது ஒரு சேனையைப் போன்று யுத்தம் செய்தது.

132. சமுத்திரம் அமைதலானது, கொடூரமான காற்று தணிந்தது, சூறாவளி முடிவடைந்தது.

133. நான் அந்த பகலிலே பார்த்தேன், குரல்கள் அடங்கின

134. சகல மனுஷ இனமும் சகதியாய் மாறின

135. நிலமானது சம மட்டமான தரையாக வைக்கப்பட்டது.

136. நான் காற்றுக்கான துவாரத்தை திறந்தேன், வெளிச்சம் என் கன்னத்தில் மேல் விழுந்தது.

137. நான் வணங்கி கீழே அமர்ந்தேன், கதறினேன்



138. கண்ணீர் என்னுடைய கன்னங்களில் வழிந்தோடியது.

139.சமுத்திரத்தின் எல்லைகள் வரை, பூமியின் இடங்களை உற்று நோக்கினேன்.

141. நிஷிர் பர்வதத்தில் கப்பலானது தரை தட்டியது

143. முதலாம் நாள், இரண்டாம் நாளிலே நிஷிர் பர்வதமானது கப்பல் நகராதபடி கப்பலை வைத்துக்கொண்டிருந்தது.

144.மூன்றாம் நாள், நான்காம் நாளிலே நிஷிர் பர்வதமானது கப்பல் நகராதபடி கப்பலை வைத்துக் கொண்டிருந்தது.

145. ஐந்தாம் நாள், ஆறாம் நாளிலே நிஷிர் பர்வதமானது கப்பல் நகராதபடி கப்பலை வைத்துக்கொண்டிருந்தது.

146. ஏழாம் நாள் ஆனபொழுதோ

147. நான் ஒரு புறாவை சுதந்திரமாக பறந்து செல்லும்படி வெளியேவிட்டேன்

148. அந்த புறாவானது பறந்து சென்றது, பின்னர் திரும்பவும் வந்து சேர்ந்தது.

149. ஏனென்றால் அது மீண்டும் வந்த பொழுது தங்கி தாபரிக்க எந்த இடமும் இல்லாதிருந்தது.

150 நான் ஒரு குருவியை வெளியே கொண்டுவந்து அது சுதந்திரமாக செல்லும்படி பறக்க விட்டேன்

151. அந்த குருவியானது வெளியே பறந்து சென்று மீண்டும் திரும்பிவந்தது.

152. ஏனென்றால் அது மீண்டும் வந்த பொழுது அது தங்கி தாபரிக்க ஒரு இடமும் இல்லாதிருந்தது.

153. நான் கப்பலுக்கு வெளியே ஒரு காகத்தை கொண்டு வந்து அதை சுயாதீனமாக பறக்க விட்டேன்.

154. காகம் வெளியே பறந்து சென்று பறவைகள் தேடிச் செல்லும் தண்ணீர்களை கண்டது

155. அது புசித்தது, மென்மையான பொருட்களை சேர்த்தது மேலெழும்பி சென்றது, ஆனால் திரும்ப வரவில்லை.

156. பின்னர் நான் சகலத்தையும் நான்கு காற்றுகளினிடமாய் கொண்டு போய் அங்கே பலி செலுத்தினேன்.

157. நான் மலைச்சிகரத்தின்மேல் ஒருபலி செலுத்துவதற்கான பிரயாணத்தை தொடங்கினேன்

158. நான் அதற்கான பாத்திரங்களை ஏழு,ஏழு எண்ணிக்கையாக ஒழுங்கு செய்து வைத்தேன்.

159.அவைகளின் கீழே நான் நாணல்களையும் கேதுரு கட்டைகளையும், மிருதுச் செடிகளையும் குவித்தேன்

160. தேவர்கள் அந்த மணத்தை நுகர்ந்தார்கள்.